# Social Exclusion: Review of Previous Studies

N. Lumna[1], R. Rajeshkannan[2]

[1] *Department of Sociology, Faculty of Arts & Culture, South Eastern University of Sri Lanka*

[2] *Department of Sociology, Faculty of Arts, University of Jaffna*

lumnanoohu@seu.ac.lk

**சுருக்கம்**

சமூகப் புறமொதுக்கல் தொடர்பான கோட்பாட்டு மற்றும் அனுபவ ரீதியான முன்னைய ஆய்வுகளை மீளாய்வு செய்வதனையும் அவற்றிலிருந்து ஆய்வு இடைவெளியினை அடையாளங்காண்பதையும் நோக்கமாகக் கொண்டு செய்யப்பட்டுள்ள இவ்வாய்வானது பண்பு ரீதியான முறையியலினை முற்றிலும் தழுவி நிற்கின்றது. இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு மூலகங்களான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையத்தள ஆவணங்கள் போன்றன இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இம்மீளாய்வானது விபரணப் பகுப்பாய்வு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு கூற்றுக்கள் மற்றும் வரைபடங்களாக விளக்கப்பட்டுள்ளன. கோட்பாட்டு ரீதியான ஆய்வுகள் மூலம் சமூக புறமொதுக்கலின் வரையறை, பல்பரிமாணத்தன்மை மற்றும் சமூக புறமொதுக்கலின் அடையாளங்கள் போன்றவையும் அனுபவ ரீதியான ஆய்வுகள் மூலம் உலக நாடுகள் சந்தித்துள்ள சமூகப் புறமொதுக்கலின் அனுபவங்களும் அடையாளங் காணப்பட்டுள்ளன. மேலும் சமூகப் புறமொதுக்களினை அளவிடும் சுட்டெண்களும் அவற்றினை பிரயோகித்துப் பார்ப்பதிலுள்ள சவால்களும் குறித்த சமூகத்தின் அல்லது தேசத்தின் தன்மைக்கேற்ப மாறுபடக்கூடும் என்பதும் இவ்வாய்வில் அறிய முடிந்தது. அத்துடன் சமூகப் புறமொதுக்கலானது வறுமை, கிராமிய பகுதிகள், மற்றும் குற்றச் செயல்கள் போன்றவற்றுடன் நெருங்கிய தொடர்பினையும் சமூக உள்ளீர்த்தல், சமூக ஒருங்கிணைவு மற்றும் சமூக ஒத்திசைவு போன்ற கருத்தாடல்களிடையேயொரு பிணைப்பினை கொண்டிருப்பதனையும் இவ்வாய்வு இணங்கண்டுள்ளது. இருப்பினும் சமூகப் புறமொதுக்கல் தொடர்பில் மிகச் சொற்பளவிலான ஆய்வுகளே இலங்கையில் செய்யப்பட்டுள்ளமை எதிர்கால ஆய்வுகளுக்கான இடைவெளியாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

**திறவுச் சொற்கள்:** சமூகப் புறமொதுக்கல், பல்பரிமாணத்தன்மை, உள்ளீர்த்தல், வறுமை, கிராமிய பகுதிகள்

**அறிமுகம்**

‘புறமொதுக்கல்’ (Exclusion) எனும் எண்ணக்கருவானது பல்பரிமாணத் தன்மை கொண்டதொன்றாகும். ஒரு தனியன் அல்லது குழு புறக்காரணிகளால் புறமொதுக்கலுக்குள்ளாக்கப்படல் மற்றும் அகக் காரணிகளால் சுயமாகவே தங்களை புறமொதுக்கிக் கொள்ளல் போன்ற பிரதானமான இரண்டு அர்த்தங்களில் பிரயோகிக்கப்படுவதைக் காணலாம். இங்கு புறக்காரணிகள் எனும் போது அதில் குறித்த தனியனை அல்லது குழுவினை சுற்றியுள்ள சமூகம் மற்றும் அரசினைக் குறிப்பிட முடியும். உதாரணமாக சில வங்கிகள் சிலருக்கு வங்கிக் கணக்கு மற்றும் கடனட்டை வழங்க மறுப்பது, சில தொழில்களுக்கு சில விண்ணப்பதாரிகள் தொழில் வழங்குணர்களால் புறக்கணிக்கப்படுவது

போன்றவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் ஏனையவர்கள் எடுக்கும் தீர்மானங்களில் சிலரை அல்லது சில குழுக்களை கவனத்திற் கொள்ளாமை எனவும் இதனை பொருள் கொள்ள முடியும்.

இரண்டாவது அர்த்தத்தில் தனியன்களின் உள்ளார்ந்த காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம். அதாவது சிலர் அல்லது சில குழுக்கல் சில விடயங்களிலிருந்து தாமாகவே புறமொதுங்குவதைக் குறிப்பிடலாம். உதாரணமாக சிலர் தாமாகவே பாடசாலையை விட்டு இடைவிலகுதல், சில தொழில்களை புறக்கணித்தல், பொருளாதார ரீதியாக குறைந்த செயற்பாடுடையோராக மாறுதல், தேர்தலில் வாக்களிக்காமல் விடுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேற்படி உதாரணங்களில் ஒருவரது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் மற்றும் மனப்பாங்கு என்பன பிரதான செல்வாக்கினைச் செலுத்துவதைக் காணலாம். இவ்விரண்டு அர்த்தங்களில் புறமொதுக்கல் எனும் எண்ணக்கரு புரிந்து கொள்ளப்பட்டாலும் கூட கல்விசார் கலந்துரையாடல்களில் பெரும்பாலும் முதலாவது அர்த்தமே எடுத்தாரயப்படுகின்றது. அந்தவகையில் புறமொதுக்கல் எனும் செயற்பாடானது தனியன்களை அல்லது குழுக்களை பிரதான சமூகத்தின் பங்குபற்றலிருந்து வெளியேறச் செய்துள்ளது என சுருக்கமாக குறிப்பிடலாம் (Giddens, 2016).

சமூகப் புறமொதுக்கல் எனும் சொற்பதமானது முதன்முதலாக பிரான்சின் சமூக நடவடிக்கைகான முன்னாள் மாநில செயலாளர் (French Secretary of State for Social Action) ரென் லினொர் (Rene Lenoir) என்பவரால் 1974 இல் பயன்படுத்தப்பட்டது. இவர் இச்சொல்லை உள மற்றும் உடலியல் ரீதியான மாற்றுத் திறனாளிகள், தற்கொலை செய்து கொள்ளும் நபர்கள், முதியோர்கள், துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டோர், குழந்தைகள், போதைக்கு அடிமையானவர்கள், குற்றவாளிகள், ஒற்றைப் பெற்றோர் குடும்பம், இன்னும் பல சிக்கல் கொண்ட குடும்பங்கள் மற்றும் ஏனைய சமூக துர் செயல்களில் ஈடுபடுபவர்களை குறிக்க பயன்படுத்தினார். இவ்வாறானவர்கள் பிரான்சின் மொத்த சனத்தொகையில் பத்தில் ஒரு பங்கினராக உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார் (Leaving no one behind, n.d, p.18).

சமூக புறமொதுக்கலானது ஒரு சிக்கலான பல்பரிமாணச் செயன்முறையாகும். அது குறைந்த வளப் பயன்பாடு, உரிமைகள், பொருட்கள் மற்றும் சேவைகள் மற்றும் சாதாரண தொடர்புகளில் அல்லது செயற்பாடுகளில் பங்குபற்ற முடியாமை போன்றவற்றைக் குறிக்கின்றது. அதாவது சமூகத்தின் பெரும்பான்மை மக்களைப் போல் ஒரு சிலருக்கு பொருளாதார, சமூக, பண்பாட்டு மற்றும் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்ற முடியாமை என குறிப்பிட முடியும். அத்துடன் இது முழு சமூகத்திலும் வாழும் தனியன்களின் வாழ்க்கைத்தரம், சமத்துவம், ஒத்திசைவு போன்றவற்றையும் பாதிக்கிறது (Levitas et al., 2007, p.9 as cited in Leaving no one behind, n.d).

வேலையின்மை, குறை திறன், குறை வருமானம், வசதியற்ற வீடு, உயரளவிலான குற்றம், குறைந்த சுகாதாரம் மற்றும் குடும்ப உடைவு போன்ற ஒன்றுடனொன்று இணைக்கப்பட்ட பிரச்சினைகளால் மக்கள் அல்லது பகுதிகள் பாதிக்கப்படுவதையே சமூக புறமொதுக்கல் எனலாம் (United Kingdom Office of the Deputy Prime Minister, 2004, p.2 as cited in Leaving no one behind, n.d).

மடானிபர் மற்றும் பலரின் கருத்தின்படி, ‘‘சமூகப் புறமொதுக்கலானது பல் பரிமாணத்தன்மை கொண்ட செயன்முறையாகும். இதில் பல வடிவங்கள் காணப்படுகின்றன. அரசியல்

செயன்முறை மற்றும் கொள்கை வகுப்புக்களில் பங்குபற்றல், தொழில் மற்றும் மூலவளங்களின் பயன்பாடு மற்றும் பொதுப் பண்பாட்டுச் செயன்முறைகளை ஒருங்கிணைத்தல் போன்றவை உள்ளடங்கும். எனவே தான் இவற்றை இணைத்து நோக்கும்போது, சமூகப் புறமொதுக்கலானது, குறிப்பிட்டதொரு சூழலில் மேற்படி வடிவங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை செயற்படுத்த தனியன்கள் அல்லது குழுக்களுக்கு விலக்களிக்கப்படும் போது அங்கு சமூகப் புறமொதுக்கல் தோற்றம் பெறலாம். அத்தோடு அவ்வடிவங்கள் இடத்திற்கேற்பவும் வேறுபடும் (Madanipour et al., 1998, p.22).

சமூகப் புறமொதுக்கலானது வெறுமனே பொருள்சார் பற்றாக்குறை மட்டுமன்றி நிறுவனங்களின் பற்றாக்குறை அல்லது முக்கிய தீர்மானங்களின் மீதான கட்டுப்பாடு அதேபோல் அன்னியமயமாதல், தாழ்வு மனப்பாங்கு போன்றவற்றுடனும் தொடர்புடையதாகின்றது. நாடுகளுக்கேற்ப இதன் அளவுகள் வேறுபடக்கூடும். வயது, பாலினம், இயலாமை, மரபினம், இனத்துவம், சமயம், இடப்பெயர்வு, சமூக, பொருளாதார நிலை, வாழிடம், பால்நிலை அடையாளம் போன்றவை கடந்த காலங்களில் உலகம் சந்தித்த சமூகப் புறமொதுக்கலின் அடிப்படைகளாகும் (Leaving no one behind, n.d).

சமூகப் புறமொதுக்கலானது தனியன்கள் பிரதான சமூகத்தின் செயற்பாடுகளின் பங்குபற்றலிலிருந்து முற்றாக நீக்கிவிடப்படுவதையும் குறித்து நிற்கின்றது. உதாரணமாக வசதியற்ற பாடசாலை, குறைந்தளவு தொழில்வாய்ப்புக்கள் உள்ள பகுதிகள் போன்றவற்றைக் கொண்ட மிகவும் எளிமையாதும் மனிதன் வாழத் தகுதியற்றதுமான குடியிருப்புக்களில் வாழும் மக்களை இதற்கு உதாரணமாக குறிப்பிட முடியும். மேலும் சமூகப் புறமொதுக்கல் எனும் எண்ணக்கருவானது சமூக உள்ளீர்த்தல் (Social inclusion) எனும் எண்ணக்கருவிற்கு எதிரானதாகும். இன்றைய நவீன அரசுகளின் கொள்கைகள் தொடர்பான நிகழ்ச்சி நிரல்களில் விளிம்பு நிலை மக்கள் ஒரு பகுதியாக உள்ளனர். இருப்பினும் இந்நிலைப்பாடு வெவ்வேறு சமூகங்களுக்கேற்ப மாறுபடக் கூடும் (Lister, 2004).

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்பு ரீதியான ஆய்வாகக் காணப்படுகின்றது. ஆய்வுக்கான தரவுகள் அனைத்தும் நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையத்தள ஆவணங்கள் போன்ற இரண்டாம் நிலை மூலகங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. மேலும் இவ்வாய்வு சமூகப் புறமொதுக்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கோட்பாட்டு மற்றும் அனுபவ ரீதியான முன்னைய ஆய்வுகளின் மீளாய்வாக அமையப்பெற்றுள்ளது. கோட்பாட்டு ரீதியான ஆய்வுகளில் சமூக புறமொதுக்கலின் வரையறை, பல்பரிமாணத்தன்மை மற்றும் சமூக புறமொதுக்கலின் அடையாளங்கள் போன்றவற்றையும் அனுபவ ரீதியான ஆய்வுகளில் உலக நாடுகள் சந்தித்துள்ள சமூகப் புறமொதுக்கத்தின் அனுபவங்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இம்மீளாய்வானது விபரணப் பகுப்பாய்வு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு கூற்றுக்கள் மற்றும் வரைபடங்களாக விளக்கப்பட்டுள்ளன.

**முடிவுகளும் கலந்துரையாடல்களும்**

சமூகத்தின் பல்வகைமைத் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுகின்ற பாரபட்சத்தின் ஒரு வடிவமே புறமொதுக்கலாகும். இவ்வெண்ணக்கரு சமூக, அரசியல், பண்பாடு மற்றும் பொருளாதார ரீதியான பரிமாணங்களில் வரலாற்றுக் காலம் தொடக்கம் இன்று வரை

உலகலாவிய ரீதியில் பரந்தளவில் கையாளப்பட்டு வருவதை காணலாம். பால்நிலை, இனத்துவம், வயது, சாதி, நிறம், தொழில், மொழி, குடியிருப்பு, மரபினம், பூர்வீகம், மற்றும் அரசியல் பங்குபற்றல் என இப்புறமொதுக்கலின் பட்டியல் நீண்டு கொண்டே செல்வதைக் காணலாம். மேற்படி பண்புகளை காரணங்காட்டி உலகின் பல பாகங்களிலுமுள்ள சில தனியன்கள் அல்லது குழுக்கள் மையநிலைச் சமூகத்துடனான தொடர்பிலிருந்து முற்றாக விடுவிக்கப்படுதலே புறமொதுக்கலாகும் என ஒரு வகையில் குறிப்பிட முடியும். இப்புறமொதுக்கலின் பாதகமான விளைவுகளை தவிர்க்க வேண்டுமாயின் புறமொதுக்கலுக்கு உள்ளாக்கப்பட்ட தனியன்களையும் குழுக்களையும் தொடர்பிலிருந்து தூரமாக்கப்பட்ட மையநிலைச் சமூகத்திற்குள் உள்ளீர்த்தல் மூலமே சாத்தியமாகின்றது. இருப்பினும் அவ்வாறு உள்ளீர்த்தலின் போது ஏதேனும் வரையறைகளுடனும் நிபந்தனைகளுடனும் உள்ளீர்த்தலும் புறமொதுக்கலையே சாரும் என இன்னொரு வகையில் குறிப்பிட முடியும்.

சமூகப் புறமொதுக்கல் எனும் எண்ணக்கருவின் தோற்றுவாய் ஐரோப்பாவாக காணப்படுகின்ற அதேநேரம் ஐரோப்பிய சமூகத்தின் அரசியல் கட்டமைப்பைச் சார்ந்ததாகவே ஆரம்ப காலங்களில் தோற்றம் பெற்றுள்ளது. பிற்காலத்தில் உலகின் பல பாகங்களிலுமுள்ள தனியன்கள் மற்றும் குழுக்களின் வாழ்வின் அனைத்து கட்டமைப்புக்கள் மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதனை காண முடிகின்றது. இவ்வாறானதொரு பின்னனியில் புறமொதுக்கல் மற்றும் உள்ளீர்த்தல் பற்றிய ஆய்வுகளும் கலந்துரையாடல்களும் இன்று அதிகமதிகமான ஆய்வாளர்களினதும் புலமையாளர்களினதும் ஆய்வுப் பொருளாக மாறியுள்ளதை பல முன்னைய ஆய்வுகளை மீளாய்வு செய்ததன் மூலம் உணர முடிகிறது. அவற்றை பின்வருமாறு நோக்கலாம்.

Byrne (2009) அவர்களின் "Social exclusion" எனும் தலைப்பிலமைந்த நூலில் ஆசிரியர், Mills (1959); Walker & Walker (1997); Madanipour et al. (1998); Marshall (1950); Wilson (1998); Roche (1992); Bessis (1995) and Wacquant & Wilson (1989) போன்ற பல பிரபல்யமான ஆய்வுகளின் துணையுடன் சமூக புறமொதுக்கல் தொடர்பிலான கோட்பாட்டு ரீதியான விளக்கங்களை சிறந்த முறையில் முன்வைத்துள்ளார். இவர் குறிப்பாக சமூக புறமொதுக்கலின் மையக்கருவாக 'கீழ் வகுப்பு' (The underclass) காணப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றார். அத்துடன் சமூக புறமொதுக்கல் 'பண்பாட்டு வறுமைக்' கோட்பாட்டுடன் தொடர்புறும் விதம் தொடர்பிலும் விளக்கியுள்ளார். அதாவது சமூக ரீதியாக புறமொதுக்கலுக்குட்பட்டதும், பொருளாதார ரீதியாக ஓரங்கட்டலுக்குட்பட்டதுமான உறுப்பினர்கள் மிகவும் வலுவானதொரு பண்பாட்டு வறுமைக்குள் தள்ளப்படுகின்றனர் என்கின்றார்.

Estivill (2003) அவர்களின் நூலான "Concepts and strategies for combating social exclusion: An overview" இல் சமூக புறமொதுக்கல் தொடர்பிலான பல்வேறுபட்ட விடயங்களை தெளிவுபடுத்தியுள்ளார். சமூகப் புறமொதுக்கல் தொடர்பான வரைவிலக்கணங்கள், அதன் தோற்றம் மற்றும் வளர்ச்சி போன்ற அடிப்படை விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. சமூகப் புறமொதுக்கலினை அடையாளங்காணல், அதற்கான அளவீடுகள், முறையியல்கள் மற்றும் சில அணுகுமுறைகள் இதில் விளக்கப்பட்டுள்ளன. இதில் புறமொதுக்கலை இல்லாமல் செய்வதற்கான தந்திரோபாயங்களை வழங்கியிருப்பது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அம்சமாகும். மேலும் இவ்வாய்வில் நான்கு உள்ளீர்த்தல் உத்திகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. அவை (1) நேரம் மற்றும் இடம், (2) தந்திரோபாயங்கள் மற்றும் சமூக

மனப்பாங்கு, (3) மீள் உற்பத்தி மற்றும் நோய்த்தடுப்பு, (4) அணுகுமுறைகள் மற்றும் வளங்களுக்கிடையிலான மூலோபாய ஒத்திசைவு என்பனவாகும். இதில் சமூக புறமொதுக்கல் பற்றி குறிப்பிடும் போது, அதிருப்தி மற்றும் சௌகரியமற்ற தன்மையினை தனியன்கள் அல்லது குழுக்கள் உணரும் போது அல்லது இலக்குகளை அடைந்து கொள்ள முடியாத போதும் சமூகப் புறமொதுக்கல் தோன்றுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சமூக புறமொதுக்கலினை அளவிடுவதில் வறுமை, வருமானம், பொருளாதார வளங்கள், வாழ்க்கைத் தரம், கல்வி, வீடு, சுகாதாரம், நுகர்வோர் சாதனங்கள், குற்றச் செயல்கள், சேவைகள், நீதி, பொழுதுபோக்கு மற்றும் சமூகப் பண்பாட்டு ஒருங்கிணைவு என்பன பிரதான மாறிலிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடயங்கள் அனைத்துமே கோட்பாடு மற்றும் யதார்த்தம் ஆகியவற்றிடையேயான புரிதலை வழங்கியுள்ளன.

Giddens, Anthony. (2016) என்பவரின் "Sociology" எனும் நுலில் சமூக புறமொதுக்கலின் நான்கு பரிமாணங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவை (1) வருமானம் மற்றும் வளங்களின் புறமொதுக்கல், (2) தொழிற்சந்தை புறமொதுக்கல், (3) சேவைப் புறமொதுக்கல் மற்றும் (4) சமூக உறவுகளிலிருந்து புறமொதுக்கல் போன்றனவாகும். சமூகப் புறமொதுக்கலுக்கும் கிராமியப் பகுதிகள் மற்றும் குற்றங்களுக்கும் இடையிலான தொடர்பு பற்றிய விரிவானதொரு புரிதலை இவ்வாய்வில் பெற்றுக்கொள்ள முடியும். குறிப்பாக வீடின்மைக்கும் சமூகப் புறமொதுக்கலுக்குமிடையிலான இருபக்க தொடர்பும் அதற்கான எடுத்துக்காட்டுகளும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. உயர்குழா சமூகப் புறமொதுக்கல் (Elite social exclusion) எனும் புதியதொரு விடயத்தினை ஆசிரியர் இந்நூலில் பயன்படுத்துகின்றார். அதாவது இவ்வுயர்குழா சமூகப் புறமொதுக்கலானது வசதிபடைத்தவர்களை சமூகத்திலிருந்து பௌதீக ரீதியாக வேறாக்கி விடுகின்றது என சுட்டிக்காட்டுகின்றார்.

Hyman et al. (2014) "A Critical review of social exclusion and inclusion indicators: Implications for the development of Canadian framework" எனும் அத்தியாயமானது சமூக புறமொதுக்கல் மற்றும் சமூக உள்ளீர்த்தல் போன்ற எண்ணக்கருக்கள் மற்றும் அதன் குறிகாட்டிகள் கல்விசார் மற்றும் கொள்கை வகுப்பு கருத்தாடல்களில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது தொடர்பிலானதொரு விமர்சன ஆய்வாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வானது சமூக புறமொதுக்கல் மற்றும் உள்ளீர்த்தல் போன்றவற்றுக்கான எண்ணக்கரு சட்டகமொன்றினையும் முன்மொழிந்துள்ளது. அதில் சமூக உள்ளீர்த்தலானது பிரதானமாக நான்கு மட்டங்களை உள்ளடக்கியுள்ளது. அவை உலகளாவிய மட்டம் (Global), பெரும் மட்டம் (Macro), இடை மட்டம் (Meso) மற்றும் நுண் மட்டம் (Micro) போன்றவையாகும். மேலும் அவ்வெண்ணக்கரு சட்டகத்தில் சமூக புறமொதுக்கலானது பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், அரசியல்/சிவில், சமூக, பண்பாடு மற்றும் போக்குவரத்து போன்ற குறிகாட்டிகளை கவனத்திலெடுத்துள்ளது. இவற்றிடையே இடைவெட்டிச் செல்லும் காரணிகளாக வயது, பாலினம், திருமண நிலை, மொழி, சமயம், இனம், புவியியல், பால், மரபு, குடியேற்ற நிலை போன்றன சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவ்வெண்ணக்கரு சட்டகத்தின் பகுப்பாய்வானது, சமூக உள்ளீர்த்தல் செயன்முறைக்கும் சமூக புறமொதுக்கலின் வெளிப்பாடுகள் அல்லது பெறுபேறுகளுக்கும் பரஸ்பர தொடர்பு இருப்பதனை எடுத்துக்காட்டியுள்ளதுடன் இவ்விரண்டின் பெறுபேறுகளில் இடைவெட்டிச் செல்லும் காரணிகள் வெவ்வேறுபட்ட மட்டத்தில் செல்வாக்குச் செலுத்துவதையும் தெளிவுபடுத்தியுள்ளது. ஆகவேதான் இவ்வாய்வின் இறுதியில் சமூகப் புறமொதுக்களின் பிரதானமாக பொருளாதாரம்,

சுகாதாரம், அரசியல் மற்றும் சிவில், சமூக மற்றும் பண்பாட்டு, கல்வி போக்குவரத்து போன்ற ஆறு தளங்கள் கருத்துருவாக்கப்பட்டுள்ளன.

Leaving no one behind. (n.d) எனும் அறிக்கையின் முதலாவது அத்தியாயமான "Identifiying social inclusion and exclusion" என்பது சமூக புறமொதுக்கலினையும் உள்ளீர்த்தலினையும் அடையாளங்காணக்கூடிய பல முக்கிய எண்ணக்கரு விளக்கங்களை உள்ளடக்கியுள்ளது. இங்கு சமூக புறமொதுக்கலானது பல்பரிமாண நிகழ்வெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் அதனை பொதுவாதொரு அளவீட்டினைக் கொண்டு அளவிடுவதானது சவால் நிறைந்ததொன்றெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வெண்ணக்கரு வெறுமனே பொருள்சார் பற்றாக்குறையோடு மட்டும் நின்றுவிடவில்லை என்பதனையும் புறமொதுக்கலின் மிக முக்கியமான பரிமாணங்களில் ஒன்றாக வறுமையும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சமூக உள்ளீர்த்தலானது சமூகப் பங்குபற்றலை விருத்தி செய்தல் என்றதொரு பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. (1) சமூக ஒருங்கிணைவு, (2) சமூக உள்ளீர்த்தல், மற்றும் (3) சமூக ஒத்திசைவு என்பன புறமொதுக்கல் மற்றும் உள்ளீர்த்தலின் பிரதான பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதோடு (1) வளங்களுக்கான சமமற்ற அணுகல், (2) சமமற்ற பங்குபற்றல், மற்றும் (3) சந்தர்ப்பங்கள் மறுக்கப்படல் போன்றவை சமூக புறமொதுக்கலின் பொதுவான பண்புகளாகவும் காட்டப்பட்டுள்ளன.

Mathieson et al. (n.d) "Social exclusion meaning, measurement and experience and links to health inequalities-a review of literature" எனும் தலைப்பிலமைந்த ஆய்வானது சமூகப் புறமொதுக்கல் எனும் எண்ணக்கருவினை விளங்கத் தேவையான பல முக்கிய வரையறைகளினை வழங்கியுள்ளது. இங்கு சமூக புறமொதுக்கல் கோட்பாட்டு ரீதியானதொரு எண்ணக்கருவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு சமூகத்தின் யதார்த்தத்தினை பிரதிபலிக்கும் கண்ணாடி வில்லை போன்றது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னைய இலக்கியங்களின் மீளாய்வாக அமைந்த இவ்வாய்வானது சமூகப் புறமொதுக்கலானது எவ்வாறு ஐரோப்பாவில் தோன்றி உலகம் முழுவதும் வியாபிக்கத் தொடங்கியது என்பது தொடர்பில் வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்கியுள்ளது. (1) Hilary Silver இன் சமூக புறமொதுக்கலுக்கான முன்னுதாரணங்கள் (Silver, 1994), (2) Ruth Levitas இன் சமூக புறமொதுக்கல் தொடர்பிலான கருத்தாடல்கள் (Levitas, 2005), (3) Jo Bellls இன் சமூகப் புறமொதுக்கல் தொடர்பிலான அணுகுமுறைகள் (Beall, 2002) போன்ற முக்கிய சில முன்னைய ஆய்வுகளை எடுத்தாராய்ந்துள்ளமை இதன் விசேட அம்சமாகும். சமூக அடுக்கமைவு, பால்நிலை, இனத்துவம், சாதி, சமயம், சமூக வகுப்பு போன்றவை சமூக புறமொதுக்க கூறுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள இவ்வாய்வில் சமூக உள்ளீர்த்தலுக்கான ஐரோப்பிய மற்றும் உலகளாவிய குறிகாட்டிகளும் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் மனித அபிவிருத்திச் சுட்டெண் மற்றும் மனித அபிவிருத்தி அறிக்கை முக்கியமானவைகளாகும். ஆயுள் எதிர்பார்க்கை, கல்வி, வாழ்க்கைத் தரம் போன்றவை முதலாவதற்கும் பால்நிலை அபிவிருத்திச் சுட்டெண், பால்நிலை வலுவூட்டல் அளவீடு, மனித வறுமைச் சுட்டெண் இரண்டாவதற்கும் உதாரணங்களாக காட்டப்பட்டுள்ளன.

Muddiman (n.d) என்பவரினால் "Theories of social exclusion and the public library" எனும் ஆய்வானது சமூக புறமொதுக்கல் மற்றும் சமூக உள்ளீர்த்தல் மற்றும் அதன் அமுலாக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது. சமூகப் பிரிவினையினை விளக்குவதற்கானதொரு

எண்ணக்கருவாக சமூகப் புறமொதுக்கலின் விருத்தியினை மீளாய்வு செய்தல் மற்றும் அதனுடைய பலம், பலவீனம் தொடர்பில் மதிப்பிடல் போன்ற செயன்முறைகளையும் உள்ளடக்கியுள்ளது. இங்கு சமூக புறமொதுக்கலின் குறுகிய மற்றும் விரிவான வெளிப்பாடுகளை வேறுபடுத்தியுள்ளது. ஐக்கிய இராஜ்ஜியத்தில் காணப்படும் புறமொதுக்கலின் பல்வகை நோக்குகளை அடையாளப்படுத்தி வறுமை மற்றும் சமத்துவமின்மைகளை சமூகத்திலிருந்து அகற்ற பரந்தளவிலான கொள்கை முன்னெடுப்புகள் தேவைப்படுவதாகவும் குறிப்பிடுகின்றது. அதில் குறிப்பாக, (1) உள்ளூர் மக்களை வலுவூட்டல், (2) வளங்கள் மற்றும் சேவைகளை கவனத்திலெடுத்தல், (3) சமவாய்ப்பு வழங்கல், (4) தகவலறியச் செய்தல் போன்றவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

Mith and Phillip (2000) ஆகியோரின் "Social exclusion in rural areas: A literature review and conceptual framework" எனும் தலைப்பிலமைந்த ஆய்வில் சமூகப் புறமொதுக்கத்தினை அடையாளங்காண்பதற்கான எண்ணக்கரு சட்டகமொன்றினை முன்னைய பல ஆய்வுகளினை மீளாய்வு செய்து முன்வைத்துள்ளனர். கிராமியப் பண்புகளுடன் கூடிய பகுதிகளில் பெரும்பாலும் புறமொதுக்கலானது வருமானம், தொழில், வீடு, சேவைகள், போக்குவரத்து, சுகாதார சேவைகள், பல்பரிமாணத் தன்மை, தனியன்களின் அனுபவம், கல்வி மற்றும் ஆதரவு வலைப்பின்னல் போன்றவற்றுடன் தொடர்புபட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும் சமூகப் புறமொதுக்கலினை வறுமை, கீழ்வகுப்பு, தீங்கிழைக்கப்படல் போன்றவற்றுடன் இணைத்து ஆய்வுகள் மேற்கொண்ட பல முன்னைய ஆய்வுகளின் பெறுபேறுகளையும் எடுத்துக்காட்டியுள்ளனர். குறிப்பாக Shuksmith et al. (1996); Scott et al. (1991); Mclaushlin (1986c); Cloke and Milbourne (1992); Bramley and Smart (1995) and Farrington et al. (1998) போன்ற இன்னும் பல புலமைசார் ஆய்வுகளின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு எண்ணக்கரு சட்டகத்தினையும் உருவாக்கியுள்ளனர்.

Shucksmith and Chapman (1998) ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்ட "Rural development and social exclusion" எனும் தலைப்பலமைந்த ஆய்வானது கிராமிய பொருளாதாரம் மற்றும் சமூகங்களினை இயக்கும் கட்டமைப்பு காரணிகளை அடையாளங் காண்பதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் சமூக ஒத்திசைவு மற்றும் புறமொதுக்கல் ஆகிய எண்ணக்கருக்களின் தொடர்பு வரையறை பற்றி விளக்கப்பட்டுள்ளது. கிராமிய அபிவிருத்தி கொள்கையுடன் சமூகப் புறமொதுக்கலினை வெளிப்படுத்துவதற்கான அளவீடுகளையும் வழங்கியுள்ளது. மேலும் அனுபவ ரீதியான மற்றும் கோட்பாட்டு ரீதியான ஆய்வுகள் சமூகப் புறமொதுக்கலினை தெளிவாக அறிந்து கொள்ள தேவைப்படுவதாக குறிப்பிடுகின்றது. மேலும் கிராமியம் சார்ந்த பகுதிகளின் புறமொதுக்கல் மற்றும் தீமைகளின் பரிமாணங்களை அறிய ஒன்றில் 'Panel Survey Data' அல்லது 'Life History Approach' பயன்படுத்துவது சிறந்தது என வலியுறுத்துவதுடன் இவ்வாய்வானது தேசங்களுக்கிடையிலான இலக்கியங்களின் மீளாய்வு மற்றும் புள்ளிவிபர ரீதியான மூலகங்கள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் தகவல்கள் மற்றும் அவர்களின் உயிர் வாழ்க்கைக்கான உத்திகள், சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்களுக்கேற்ப பொருந்திக் கொண்டு வாழும் தந்திரோபாயம் போன்றவற்றை பங்குபற்றல் ஆய்வுகளுடாக அறிந்து கொள்வதனூடாக புறமொதுக்கப்பட்ட சமூகங்களுக்கான தீர்வைக் காண முடியும் எனக் குறிப்பிடுகின்றது.

Taket et al. (2009) இனால் பதிப்புச் செய்யப்பட்ட "Theorising social exclusion" எனும் தலைப்பிலமைந்த நூலானது புறமொதுக்கலின் சமூக, பண்பாட்டு நோக்குகளை கவனத்திற்கொண்டு பல்துறை சார்ந்த அணுகுமுறைகளை பரிந்துரை செய்துள்ளது. அத்துடன் சமூக உள்ளீர்த்தலினை வலியுறுத்தும் பல்வேறுபட்ட செயன்முறைகளை தெளிவுபடுத்தியுள்ளது. சுகாதாரம், நலன்புரி, கல்வி போன்ற குறிகாட்டிகளை இவ்விரு செயன்முறைகளுடனும் இணைத்துப் பார்க்கின்றது. சமூக புறமொதுக்கலினை இயக்கும் இயந்திரங்கள் மற்றும் அவற்றிடையேயான தொடர்பு, புறமொதுக்கலிற்கான வழிகள் போன்றவற்றையும் ஆராய்ந்துள்ளது. பொதுச் சுகாதாரம், சுகாதாரத்தை தரமுயர்த்தல், சமூகப் பணி, சமூக அபிவிருத்திக் கொள்ளை, அரசியல் சூழல் போன்ற துறைகளுக்கும் பயன்படும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

Vroomen et al. (2007) இனால் சமர்ப்பிக்கப்பட்ட "Explaining social exclusion: A theoretical model tested in the Netherlands" எனும் அறிக்கையானது சமூக புறமொதுக்கத்தினை அளவிடுவதற்கான எண்ணக்கரு மாதிரியொன்றினை விருத்தி செய்துள்ளதுடன் சமூக புறமொதுக்கலினை அனுபவ ரீதியாக ஆய்வு செய்வதற்கான சிறந்ததொரு மதிப்பீட்டு முறையியலினையும் வழங்கியுள்ளது. பல்பரிமாணம் கொண்டதொரு எண்ணக்கருவாக சமூக புறமொதுக்கலினை குறிப்பிட்டு பொருள்சார் பற்றாக்குறை, சமூக உரிமைகளை முழுமையாக செயற்படுத்த முடியாமை, குறைந்தளவான சமூகப் பங்குபற்றல் மற்றும் சமூக ஒருங்கிணைவு போன்றனவற்றின் இணைவினால் சமூக புறமொதுக்கல் செயற்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் இவ்வாய்வில் குறைந்தளவான சுகாதாரம் சமூக புறமொதுக்கலின் ஆபத்துக் காரணியாகவும் குறைந்த வருமானம், அதிகரித்த தங்கி நிற்றல், ஒற்றைப் பெற்றோர் குடும்பத்தில் வாழ்தல் போன்றன அதனை தீர்மானிக்கும் காரணிகளாவும் சுட்டிக்காட்டப்படுள்ளன.

மேற்படி ஆய்வுகள் அனைத்துமே சமூக புறமொதுக்கல் எனும் எண்ணக்கருவின் நான்கு முக்கிய வெளிப்பாடுகளை வேறுபடுத்திக் காட்டுவதைக் காணலாம். அவையாவன,

1) வறுமை மற்றும் தீமையின் பல்பரிமாண இயல்பு.
2) பற்றாக்குறையின் நிலையான தன்மை.
3) சமூகக் குழுக்களின் புவியியல் ரீதியான பற்றாக்குறையின் தீவிர விளைவுகள்.
4) இத்தகைய குழுக்களை உள்ளீர்த்தலில் மையச் நிலைச் சமூகத்தின் விருப்பம்.

மேலும் சமூக ரீதியாக புறமொதுக்கப்பட்ட தனியன் ஒன்று,

1) அவன் / அவள் புவியியல் ரீதியாக குறித்த சமூகத்தின் குடியிருப்பாளாராவார். ஆனால்,
2) அவன் / அவளை கட்டுப்படுத்தும் காரணிகளால்,
3) அவன் / அவள் சமூகத்தின் ஏனைய பிரஜைகள் போன்று சாதாரண செயற்பாடுகளில் பங்குபற்ற முடியாது. இருப்பினும்,
4) அவன் / அவள் பங்குபற்ற விரும்புவர் (Byrne, 2009, p.62).

சமூக புறமொதுக்கலுக்குட்பட்ட தனியன்கள் பெரும்பாலும் தாம் வாழும் சமூகத்தின் குடியுரிமையைப் பெற்றிருப்பர். மையநிலைச் சமூகத்தின் உறுப்பினர்களைப் போன்று சாதாரணமான எந்தவொரு நிகழ்வுகளிலும் பங்குபற்றவும் விரும்புவர். இருப்பினும் அதற்கு பல தடைகள் காணப்படும். இதுவே புறமொதுக்கலுக்குட்பட்ட அனைத்து தனியன்களினதும் மற்றும் குழுக்களினதும் யதார்த்தமாகும்.


பிரித்தானியாவின் வீட்டுக் குழு ஆய்வானது, (British Household Panel Sruvey) பிரதானமாக நான்கு சுட்டெண்கள் புறமொதுக்கப்பட்டவை மற்றும் புறமொதுக்கப்படாதவை என்பவற்றை பிரித்தறிய பயன்படுத்தப்படுவதாக குறிப்பிடுகின்றது. அவையாவன,

1. சமப்படுத்தப்பட்ட வீட்டு வருமானம் சராசரி வருமானத்தின் அரைவாசிக்கு கீழுள்ள நிலை.
2. பொருளாதார நடவடிக்கையின் வகையானது ஒன்றில் வேலையின்றி இருத்தல் அல்லது சுயதொழில் செய்தல், மாணவன் அல்லது குடும்பத்தை பராமரித்தல்.
3. தனியன்கள் பொதுத்தேர்தலில் வாக்களிக்க முடியாமை மற்றும் எந்தவொரு பிரச்சார ஒழுங்கமைப்பிலும் உறுப்பினராக முடியாமை.
4. குறித்த நபருக்கு ஆதரவளிக்க ஒருவரும் இல்லை (கேட்டல், ஆறுதல் அளித்தல், கஸ்டத்தில் உதவுதல், ஓய்வாக இருத்தல் மற்றும் ஊக்குவித்தல்). (Burchardt et.al, 2002, p.34)

மேற்படி புறமொதுக்கல் தொடர்பான வரையறைகள் மற்றும் வாதங்களினடிப்படையில் சமூக புறமொதுக்கல் இடம்பெறுவதற்கான அடையாளங்கள் பின்வரும் வரைபடம் மூலமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

**வரைபடம்: 1**

**சமூக புறமொதுக்கலின் அடையாளங்கள் (Symptoms of Exclusion)**




Soure: (Leaving no one behind, n.d, p.27)

2000 ஆம் ஆண்டின் மக்கள் தொகை மதிப்பீடானது (PSE Survey) சமூக புறமொதுக்கலின் 04 பரிமாணங்களை பிரித்துக் காட்டுவதாக Gordon et al., (2000) குறிப்பிடுகின்றனர். அவையாவன,

1) போதுமான வருமானம் அல்லது மூலவளங்களின் வறுமை அல்லது புறமொதுக்கல் (Poverty or exclusion from adequate income or resources).
2) தொழிற் சந்தை புறமொதுக்கல் (Labour market exclusion).
3) சேவைப் புறமொதுக்கல் (Service exclusion).
4) சமூக உறவுகளிலிருந்து புறமொதுக்கல் (Exclusion from social relations).

Graham Room (1992 & 1995) பின்வரும் மூன்று விடயங்களை உள்ளடக்கியதாக சமூக புறமொதுக்கலின் பரிமாணங்களை முன்வைக்கின்றார். இவர் குறிப்பிடும் மூன்று பகுதிகளும் சமமற்ற வலுவின் இயல்பு, விளைவுகள் மற்றும் அமுலாக்கங்களைப் பற்றி விபரிக்கின்றது. அத்துடன் சமூக மற்றும் சுகாதார சமத்துவமின்மைகளை புரிந்து கொள்ளவும் வெளிப்படுத்தவும் சமூகப் புறமொதுக்கலினை பயன்படுத்துகின்றார் ஆய்வாளர் (as cited in Mathieson et al., n.d).

1. பல்பரிமாணத் தன்மை (Multidimensional)
2. மாறும் மற்றும் இயக்கவியல் தன்மை (Dynamic)
3. சார்புடைய தன்மை (Relational)

UNDP (2007) ஆனது சமூகப் புறமொதுக்கத்தின் பரிமாணங்களை விளக்க மனித உரிமை அடிப்டைகளைக் கொண்ட அணுகுமுறையினை பரிந்துரைக்கின்றது. இதன் வாதத்தின்படி, சமூகப் புறமொதுக்கலானது சமூகப் பண்புகள் மற்றும் சமூக அடையாளம் ஆகியவற்றினடிப்படையிலான பாரபட்சத்தினை குறிக்கின்றது எனக் குறிப்பிடுகின்றது. அதே போன்றுதான் Marshall (1964) சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள், சமூக உரிமைகள் என உரிமைகளின் மூன்று அபிவிருத்தி கட்டங்களை அடையாளப்படுத்துவதனூடாக சமூக புறமொதுக்கலின் பரிமாணங்களை விளக்க முற்படுகின்றார். Mathieson et al., (n.d) 1948 இன் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தினை எடுத்துக்காட்டி சமூகப் புறமொதுக்கலின் பரிமாணத்தை விளக்கியுள்ளார்கள்.

எனவேதான் மேலுள்ள ஆய்வாளர்கள், சமூக புறமொதுக்கலானது சிவில், அரசியல், பொருளதார மற்றும் சமூக, பண்பாட்டு உரிமைகள் போன்ற பிரதான பரிமாணங்களில் தோன்றுவதாக குறிப்பிடுகின்றனர். கீழே வகைப்படுத்திக் காட்டியுள்ளவாறு அவற்றில் ஒன்றோ அல்லது பலவையோ ஒரு நாட்டில் வாழும் தனியன்களுக்கோ அல்லது குழுவுக்கோ மறுக்கப்பட்டு ஏனைய தரப்பினருக்கு வழங்கப்படும் போது அது புறமொதுகளுக்கான அறிகுறி எனக் குறிப்பிடுகின்றனர்.

- ❖ சிவில் உரிமைகள் - வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்பு, சட்டத்தின் முன் சமம், எதேர்ச்சையாக கைது செய்யப்படாமலிருத்தல், சமய சுதந்திரத்திற்கான உரிமை.

- ❖ அரசியல் உரிமைகள் - பேச்சு சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல், அரசியல் பங்குபற்றல் மற்றும் வாக்களிப்பு

- ❖ பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் - குடும்பமாவதற்கான உரிமை, கல்வி, சுகாதாரம், நலன்புரி, சமூக பாதுகாப்பு, வேலை மற்றும் நியாயமான ஊதியம், வர்த்தக சங்கங்களை உருவாக்கல் மற்றும் பொழுதுபோக்கு.

- ❖ பண்பாட்டு உரிமை – பண்பாட்டு நலன்கள், சுதேச நிலங்களை வைத்திருக்கும் உரிமை, சடங்குகள், பகிரப்பட்ட நடைமுறைகள் மற்றும் ஒருவரின் மொழியைப் பேசும் உரிமை மற்றும் தாய்மொழியில் கல்வி.

Roca (1998) சமூக புறமொதுக்கலின் மூன்று பரிமாணங்களை அடையாளப்படுத்துவதாக Mathieson et al., (n.d) குறிப்பிடுகின்றனர். அவற்றை பின்வருமாறு சுருக்கமாக விளங்கிக் கொள்ளலாம்.

1. கட்டமைப்பு அல்லது பொருளாதார பரிமாணம் : இது தொழிற்சந்தையுடன் தொடர்புடைய குறைந்தளவிலான பொருள் வளங்களை குறிக்கின்றது.
2. சூழல் அல்லது சமூக பரிமாணம் : குடும்ப வாழ்வு மற்றும் சமுதாயத்துடன் குறைந்த அளவிலான ஒருங்கிணைவினைக் குறிக்கின்றது.
3. அகநிலை அல்லது தனிப்பட்ட பரிமாணம் : சுய அழிப்பு மற்றும் அதிகரித்த அனோமிய நிலையினைக் காட்டுகின்றது.

சமூகப் புறமொதுக்கலின் பரிமாணமானது பல்வேறு ஆய்வாளர்களினால் பல்வேறுபட்ட கோணங்களில் நோக்கப்பட்டு விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவை அனைத்துமே வித்தியாசமான கோணங்களில் நோக்கப்பட்டிருந்தாலும் கூட பொதுவாக அனைத்தினதுமே சாரமானது, பொருளாதாரம், தொழிற்சந்தை, சேவை மற்றும் சமூக உறவு போன்ற பிரதான நான்கு பரிமாணங்களை மையப்படுத்தியதாகவே சமூகப் புறமொதுக்கலானது இடம் பெறுகின்றது என்பதாகவே உள்ளது.

**முடிவுரை**

சமூக புறமொதுக்கல் தொடர்பில் இடம்பெற்றுள்ள முன்னைய ஆய்வுகளின் முடிவுகளினை வைத்து நோக்குகின்ற போது, சமூகப் புறமொதுக்கல் எனும் எண்ணக்கருவுக்கு உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுவான வரையறையினை குறிப்படுவது கடினம் என்பது தெளிவாகின்றது. இருப்பினும், அவை அனைத்தினதும் சாராம்சத்தினை பார்க்கும் போது, சமூக புறமொதுக்கல் என்பது தனியன்கள் தமது வாழ்வின் பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் பண்பாட்டு தளங்களில் முழுமையாக பங்கேற்க முடியாத ஒரு நிலையினை விபரிக்கின்றது. அதேபோல் இந்நிலைக்கு வழிவகுக்கும் காரணிகளையும் குறிக்கின்றது. எனவேதான் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, சமூக புறமொதுக்கல் என்பது 'சமூகத்தின் பங்குபற்றலின்மை' என்பது அனைத்து அறிஞர்களினதும், அரச மற்றும் அரச-சார்பற்ற நிறுவனங்களினதும் வரையறைகளின் மையக் கருத்தாகவும் காணப்படுகின்றது.

இவ்வாய்வானது சமூகப் புறமொதுக்கல் தொடர்பாக உலகளாவிய மற்றும் தேசிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கோட்பாட்டு மற்றும் அனுபவ ரீதியான முன்னைய ஆய்வுகளின் மீளாய்வாக காணப்படுகின்றது. இதில் எண்ணக்கரு விளக்கங்கள், கோட்பாட்டு ரீதியான அணுகுமுறைகள் மற்றும் பல்பரிமானத்தன்மை போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மீளாய்வானது சமூகப் புறமொதுக்கல் தொடர்பானதொரு எண்ணக்கருச் சட்டகமொன்றினை உருவாக்கிக்கொள்ளவும் உறுதுணையாக அமைந்துள்ளது. இருப்பினும் இலங்கையினை எடுத்துநோக்குகின்ற போது சமூகப் புறமொதுக்கல் தொடர்பில் இடம்பெற்ற ஆய்வுகள் மிகவும் சொற்பமானவையாகவே காணப்படுவதை முன்னைய ஆய்வுகளின் மீளாய்வினூடாக அறிய முடிகின்றது. மேலும் இவ்வாய்வானது சமூகப் புறமொதுக்கல் தொடர்பிலான எதிர்கால ஆய்வுகளுக்கு சிறந்ததொரு தொடக்கப்புள்ளியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**உசாத்துணைகள்**

Burchardt, T., Le Grand, J. & Piachaud, D. (2002). Degrees of exclusion: developing a dynamic multidimensional measure, In J. Hillset al. (eds.), *Understanding Social Exclusion* (Pp. 30-43). Oxford: Oxford University Press.

Byrne, D. (2009). *Social exclusion* (2nd ed.). Rawat Publication.

Estivill, J. (2003). *Concepts and strategies for combating social exclusion: an overview*. Geneva: International Labour Organisation

Giddens, Anthony. (2016). *Sociology* (7th ed.). Inc: John Wiley & Sons.

Hyman, Ilene., Mercado, Ruben., Edward, Grace., & Patychuk, Dianne. (2014). *A Critical review of social exclusion and inclusion indicators: Implications for the development of Canadian framework*. University of Toronto. Retrieved from https://www.researchgate.net/publication/261760136_Chapter_6_A_Critical_Review_of_Social_Exclusion_and_Inclusion_Indicators_Implications_for_the_Development_of_a_Canadian_Framework_Ilene_Hyman_Ruben_Mercado_GraceEdward_Galabuzi_and_Dianne_Patychuk_/link/569ce02608ae8f8ddc702bca/download

Leaving No One Behind. (n.d). Chapter 1 Identifying social inclusion and exclusion. https://www.un.org/esa/socdev/rwss/2016/chapter1.pdf

Lister, R. (1991). *The exclusive society: citizenship and the poor*. Child Poverty Action Group.

Madanipour, A., Cars, G. & Allen, J. (eds.) (1998). Social Exclusion in European Cities. Jessica Kingsley.

Mathieson, J., Popay, J., Enoch, E., Escorel, S., Hernandez, M., Johnston, H., & Rispel, L. (n.d). *Social exclusion meaning, measurement and experience and links to health inequalities- a review of literature*. Social exclusion literature review. https://www.who.int/social_determinants/media/sekn_meaning_measurement_experience_2008.pdf.pdf

Mith, Markshuks., & Phillip, Lorna. (2000). *Social exclusion in rural areas: A Literature Review and Conceptual Framework*. (Report No. 127). http://citeseerx.ist.psu.edu/viewdoc/download?doi=10.1.1.196.6693&rep=rep1&type=pdf.

Muddiman, Dave. (n.d). Working Paper 1 Theories of social exclusion and the public library. https://core.ac.uk/download/pdf/11879329.pdf

Room. (1994). *Poverty studies in the EU: Retrospect and Prospect, paper to conference on Understanding Social Exclusion: Lessons from Transnational Research Studies*. Policy Studies Institute.

Shucksmith, Mark & Chapman, Pollyanna. (1998). Rural development and social exclusion. *Sociologia Ruralis*, 38(2), Pp.225-242, Retrieved from https://onlinelibrary.wiley.com/doi/pdf/10.1111/1467-9523.00073

Taket, A., Crisp, B.R., Nevill, A., Lamaro, G., Graham, M., & Godfrey, S.B. (2009). *Theorising social exclusion* (1st ed.). Roultledge.

Uyangoda, J., & Mel, N. D. (2012). *Reframing democracy, perspectives on the cultures of inclusion and exclusion in contemporary Sri Lanka.* Social Scientists' Association.

Vrooman, Cok., Gijsbers., & Jehoel, Gerda. (2007). *Explaining social exclusion; A Theoretical Model Tested in the Netherlands*. The Netherlands Institute for Social Research/SCP: The Hague.https://www.researchgate.net/publication/236981206_Explaining_Social_Exclusion_A_Theoretical_Model_Tested_in_The_Netherlands